# செய்தி குறிப்பு

தமிழ்நாட்டிலுள்ள தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்களுக்கு தேவையான பொட்டாசியம் குளோரேட்டை மாநிலத்திலுள்ள 6 தீப்பெட்டி குழுமங்கள் மூலம் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இக் குழுமங்கள் விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், கழுகுமலை,குடியாத்தம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இக்குழுமங்கள் தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்களுக்கு தேவையான பொட்டாசியம் குளோரேட்டை இறக்குமதி செய்து விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டு, இதன் முதற்படியாக, இக்குழுமங்கள் சுமார் 150 மெட்ரிக் டன் அளவிற்கு பொட்டாசியம் குளோரேட்டை இறக்குமதி செய்ய ஆணைகள் பிறப்பித்துள்ளன. அவ்வாறு இறக்குமதி செய்து விநியோகிக்க இக்குழுமங்களுக்கு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) ரூ.90 இலட்சத்தினை நடப்பு மூலதனக் கடனாக வழங்கியுள்ளது.

இந்த 6 தீப்பெட்டி குழுமங்களும் மாநிலத்திலுள்ள அனைத்து தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்களுக்கும் தேவையான பொட்டாசியம் குளோரேட்டை இறக்குமதி செய்து விநியோகிக்க உள்ளன. பொட்டாசியம் குளோரேட் வாங்க விரும்பும் தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட தீப்பெட்டி குழுமங்களை அணுகி தங்களுக்கு தேவைப்படும் பொட்டாசியம் குளோரேட்டின் அளவு குறித்து உறுதி மொழிக்கடிதம் கொடுப்பதோடு, இறக்குமதி செய்யப்படும் பொட்டாசியம் குளோரேட்டின் மதிப்பில் 20 விழுக்காடு தொகையை முன்பணமாக செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். அந்நிறுவனங்களிடமிருந்து உறுதி மொழிக்கடிதம் மற்றும் முன்பணம் பெறப்பட்ட 35 நாட்களுக்குள், தீப்பெட்டி குழுமங்கள் அவர்களுக்கு தேவையான பொட்டாசியம் குளோரேட்டை இறக்குமதி செய்து வழங்கும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்களும் தங்களுடைய பொட்டாசியம் குளோரேட் தேவையை பூர்த்தி செய்ய, அரசு மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த அரிய வசதியினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Sd./-

P. Selvam I.A.S.,

Principal Secretary ,MSME, Dept.